Registered as a Newspaper

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 263

வியாழக்கிழமை
15 ஒகஸ்ட் 2024

ஆடி 30 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"அரசாங்க
உத்தியோகத்தர்மாருக்கும்
தூண்டில்
நல்லாத்தான் போடுகினம்
போல"





## செஞ்சோலைப் படுகொலைகள்: நினைவேந்தல் உணர்வுபூர்வம்

புதுக்குடியிருப்பு, ஓக. 15

முல்லைத்தீவு, செஞ்சோலை வளாகத்தில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதல்களால் கொல்லப்பட்ட 54 மாணவர்களின் 18ஆவது ஆண்டு நினைவேந்தல் தமிழர் தாயகத்தின் பல பகுதிகளிலும் நேற்று உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. 12

# ஜனாதிபதித் தேர்தலில் 40 வேட்பாளர்கள்

### கட்டுப்பணக்காலம் நேற்றுடன் நிறைவு

**கொழும்பு, ஒகஸ்ட் 15**

**ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு கட்டுப்பணம் செலுத்தும் கால எல்லை நேற்றுடன் நிறைவுற்றுள்ள நிலையில், 40 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.** 12

### ரணிலுடனான சந்திப்பு

## ஆதரவளிப்பதற்கு அல்ல அர்ப்பணிப்பை அறிவதற்கே

### ரெலோ, புளொட், ஜ.போ.க. விளக்கம்

கொழும்பு, ஓக. 15

தமிழர்களின் இனப்பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொண்டுள்ள அர்ப்பணிப்பைத் தெரிந்துகொள்வதற்காகவே அவரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினோம் என்று ரெலோ, புளொட் மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் விளக்கமளித்துள்ளனர். 12

## தேர்தலுக்காக லஞ்சம் எட்டுப்பேர் கைதாகினர்

கொழும்பு, ஓக. 15

எக்சத் லங்கா பொதுஜன கட்சியின் செயலாளர் உட்பட அந்தக் கட்சியைச் சேர்ந்த எட்டுப் பேர் இலஞ்சம் கோரிய குற்றச்சாட்டில் பொலிஸாரால் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளனர். 12

## 2025ஆம் ஆண்டு பட்ஜெட் நிதியொழுக்கம் இறுக்கம்!

கொழும்பு, ஓக. 15

பொதுமக்களின் நிதியை செயற்றிறனுடனும் மக்களின் நன்மைக்காகவும் பயன்படுத்தக்கூடிய வகையிலும், அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் 12

## அரச ஊழியர்களின் ஊதியம் எட்டப்பட்ட முடிவுகள் விவரம்

அமைச்சரவையின் நேற்றுமுன்தினக் கூட்டத்தில், அரச ஊழியர்களின் ஊதிய அதிகரிப்புகள் மற்றும் இதர விடயங்கள் தொடர்பில் சில உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. அவற்றின் விவரங்கள்.

(விரிவு: பக்.10)

## ஆய்வுக்கப்பல்கள் எதையும் அனுமதிக்கப்போவதில்லை!

### கொழும்பு திட்டவட்டம்

கொழும்பு, ஓக. 15

சீன கடற்படைக்கப்பல்கள் இலங்கை கடற்பரப்பில் ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபடுவது குறித்து இந்தியாவும் அமெரிக்காவும் இலங்கை அரசிடம் தமது கரிசனைகளை வெளிப்படுத்தியதையடுத்து, இந்த வருடம் எந்த 12



### வடக்கு மாகாண

## சுதேச மருத்துவத் திணைக்கள ஆணையாளராக சர்வானந்தன்

யாழ்ப்பாணம், ஓக. 15

வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளராக வைத்திய கலாநிதி தி.சர்வானந்தன் நியமிக்கப்பட்டுள்ளார். வடக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள பதில் ஆணையாளர் ஓய்வு பெற்றுச் சென்ற நிலையில் ஏற்பட்ட வெற்றிடத்துக்கே, பிரதி மாகாண 12

## 2 ஆம் தவணைக்கான விடுமுறை நாளை!

கொழும்பு, ஓக. 15

பாடசாலைகளுக்கு நாளை 16ஆம் திகதியுடன் இரண்டாம் தவணை விடுமுறை வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 12

## காணாமற்போனோர் விவகாரம்; ஓ.எம்.பி.யால் விசாரணைகள்

கிளிநொச்சி, ஓக. 15

காணாமற்போனோர் தொடர்பான அலுவலகம், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 243 பேரிடம் நேற்றும் நேற்றுமுன்தினமும் விசாரணைகளையும், வாக்குமூலங்களையும் பதிவுசெய்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட குடும்பங்களிடம் இது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்படி கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 128 பேரிடமும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 17 12

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்கச் செயற்பாடு மிகவும் அத்தியாவசியம்

## நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு



**கொழும்பு, ஓக.15**
**சர்வதேச சமூகத்துடன் செயற்படும்போது நல்லிணக்க செயற்பாடுகள் மிகவும் அத்தியாவசியமாகும் என்று தெரிவித்துள்ளார் நீதி அமைச்சர் அலி சப்ரி.**

நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள அலி சப்ரி நேற்றுமுன்தினம் தனது கடமைகளை நீதிஅமைச்சில் பொறுப்பேற்றபின்னர் அமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடியபோது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிப்பதில் நீதிஅமைச்சின் கடப்பாடுகள் முக்கியமாகும். அதனால் இந்தத் துறைகளின் செயற்பாடுகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். விரைவாக நிறைவு செய்யப்படவேண்டிய நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கிச் செயற்பட வேண்டும். வழக்கு விசாரணை செய்துமுடிப்பது மாத்திரமல்ல, நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிப்பதில் நீதியமைச்சின் கடப்பாடுகள் முக்கியமாகும்-என்றார். (எ-இ)




# ரணிலுக்கு ஆதரவான சுவரொட்டிகள் கிழிப்பு

யாழ்ப்பாணம், ஓக.15
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் பருத்தித்துறையில் கிழிக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதித் தேர்தல் நெருங்கியுள்ள சந்தர்ப்பத்தில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் வேட்பாளர்கள் தீவிரமாக இறங்கியுள்ளனர்.
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான சுவரொட்டிகள் 'ரணில் காட்டும் வழியில் நாம் ஓரணியில்' என்ற வாசகங்கள் குறிப்பிடப்பட்டு பருத்தித்துறை பிரதேசத்தில் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன. இந்தநிலையில் பருத்தித்துறை முதலாம்கட்டைச் சந்தி பகுதியில் இவ்வாறு ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் இனந்தெரியாதோரால் கிழிக்கப்பட்டுள்ளன. (எ-100)

# சஜித்தின் கூட்டணியில் சங்கமித்தார் சம்பிக்க!

கொழும்பு, ஓக.15
நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தலைமையிலான ஐக்கிய குடியரசு முன்னணி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணியில் இணைந்துள்ளது. இதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை கொழும்பில் நேற்று கைச்சாத்திடப்பட்டது.
2019 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது சஜித் பிரேமதாஸவை சம்பிக்க ஆதரித்திருந்தார். அதன்பின்னர் நடைபெற்ற பொதுத்தேர்தலிலும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் கீழேயே அவர் போட்டியிட்டிருந்தார்.
எனினும், காலப்போக்கில் ஐக்கிய மக்கள் கூட்டணியில் இருந்து வெளியேறி, 43 ஆம் படையணியை உருவாக்கினார். தற்போது அந்த அணி ஐக்கிய குடியரசு முன்னணியாக உதயமாகியுள்ளது. அந்தத் தரப்பே சஜித்துடன் நேற்று மீண்டும் இணைந்துள்ளது. (எ-44)

# இனப்பிரச்சினையைத் தீர்க்காமல் நாட்டைக் கட்டியெழுப்பமுடியாது

## ரணில் பக்கம் தாவிய ராஜித தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 15
இனப்பிரச்சினை தீர்க்கப்படும்வரை இந்நாட்டைக் கட்டியெழுப்பமுடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவை வழங்கும் அறிவிப்பை விடுத்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,
இந்நாட்டில் இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும், அனைத்து இன மக்களுக்கும் சம உரிமை வழங்கப்படவேண்டும், இனப்பிரச்சினையைத் தீர்க்காவிடின் நாட்டை கட்டியெழுப்பமுடியாது. இனப்பிரச்சினை இருந்தது, அதனைத் தீர்த்தாலேயே சிங்கப்பூரைக் கட்டியெழுப்ப முடிந்தது என லீ குவான் குறிப்பிட்டார்.
சஜித்தை நான் நேசிக்கின்றேன், ஆனால் சஜித்தைவிட என் தாய் நாட்டை நேசிக்கின்றேன், எனது மகன் சத்துரவுக்கு தேசியப்பட்டியல் தருவதாகக் கூறினார். நீங்கள் கேட்கும் எதையும் வழங்கத் தயார் எனவும் சஜித் என்னிடம் கூறினார். அந்தளவு என்மீது அவர் அன்பு வைத்துள்ளார், நானும் அப்படித்தான், சஜித் உட்பட அவர் அணியில் உள்ள எவர் என்னை விமர்சித்தாலும் சஜித்துக்கு எதிராக ஒரு வார்த்தையேனும் பயன்படுத்தமாட்டேன். எனவே, ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை வெற்றி பெறவைக்கும்வரை ஓயமாட்டேன். செப்ரெம்பர் 21 ஆம் திகதி அவர் நிச்சயம் ஜனாதிபதியாவார்- என்றார். (ஒ-44)

# மற்றொரு எம்.பி.யும் ரணில் பக்கம் தாவல்

## நிர்க்கதியில் பெரமுன

கொழும்பு, ஓக. 15
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் பிரியங்கர அறிவித்துள்ளார்.
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சந்தித்த பின்னர் அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.
இவர் மறைந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் வெற்றிடத்தை நிரப்பும் முகமாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவானவர் என்பதுடன், தேசிய சுதந்திர முன்னணியின் உறுப்பினருமாவார்.
அதேவேளை ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் ரணிலை ஆதரித்து வருவதால் பொதுஜன பெரமுனக் கட்சியின் கிராம மற்றும் நகரக் கட்டமைப்பு நாடு முழுவதும் கடுமையாக வீழ்ச்சியடைந்து வருவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச-இ)



# சஜித்துடன் டில்ஷான் இணைவு

கொழும்பு, ஓக.15
ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாஸவுக்கு இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் திலகரத்ன டில்ஷான் ஆதரவு தெரிவித்துள்ளார்.
நேற்றுப் புதன்கிழமை ஐக்கிய மக்கள் சக்தியோடு அவர் இணைந்து கொண்டார். (ச-44)

# 27 கட்சிகள் சஜித் பக்கம்



கொழும்பு, ஓக.15
ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பதற்காக 27 அரசியல் கட்சிகள் ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன.
மனிதநேய மக்கள் கூட்டணியில் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய லங்கா பொதுஜன கட்சி, ஜனநாயக மக்கள் காங்கிரஸ் மற்றும் தேசிய முன்னணி உள்ளிட்ட 27 கட்சிகள் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன. அதேவேளை, கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன உள்ளிட்ட ஐக்கிய இடதுசாரி முன்னணியும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகிறது. (ச-இ)

# வேட்புமனுவில் நாமல் கையொப்பம்



கொழும்பு, ஓக.15
ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் சார்பில் களமிறங்கும் நாமல் ராஜபக்ச நேற்று வேட்பு மனுவில் கையொப்பமிட்டார்.
மஹிந்த ராஜபக்சவின் கொழும்பு விஜேராம மாவத்தையில் உள்ள வதிவிடத்தில் நடைபெற்ற நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் மொட்டுக் கட்சி ஸ்தாபகரான பஸில் ராஜபக்ச ஆகியோரும் கலந்துகொண்டனர்.
நாமல் ராஜபக்சவின் தாய் மற்றும் மனைவியும் பிரசன்னமாகி இருந்தனர். நாமல் ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்றிருந்தனர். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்குரிய கட்டுப்பணத்தை நாமலின் சார்பில் கட்சிச் செயலாளர் நேற்று தேர்தல்கள் ஆணைக்குழுவில் செலுத்தினார். வேட்பு மனு தாக்கல் இன்று இடம்பெறவுள்ளது. (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## செல்வச்சந்நிதி ஆலய
# தெய்வீக இசையரங்கில் வில்லிசை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 15

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவப் பெருவிழா ஆரம்பமாகி சிறப்பாக இடம்பெற்று வரும் நிலையில் திருவிழாக் காலங்களில் தினமும் இரவு வேளையும் சந்நிதியான் சூழலில் செல்வச்சந்நிதி கலாமன்றத்தினின் ஏற்பாட்டில் தினமும் ஆன்மீகம் சார்ந்த நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த 11ஆம் திகதி 8ஆம் நாள் மாலைத்திருவிழா இடம்பெறுவதற்கு முன்னர் வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் அறநெறி பாடசாலை மாணவர்களின் விபுலானந்தர் பற்றிய வில்லிசை கச்சேரியும் இடம்பெற்றது.

சந்நிதியான் கலாமன்றத்தால் வில்லிசையை சிறப்பித்த மாணவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது டன் நெறியாள்கை செய்த அறநெறி ஆசிரியர்களுக்கும் பாராட்டு தெரிவிக்கப்பட்டது. (ச-26)

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக. 15

உரும்பிராய் ஞான வைரவர் கோயிலடி சனசமூக நிலையத்தின் முழுநிலாக் கருத்தரங்கு எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சனசமூக நிலையத் தலைவர் இரா.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வடக்கு மாகாண முன்னாள் கல்வியமைச்சர்க. சர்வேஸ்வரன் பங்கேற்று 'ஜனாதிபதித் தேர்தலும் தமிழர்களும்' எனும் தொனிப்பொருளில் கருத்துரையாற்றவுள்ளார். (ச)







# நல்லூர்த் திருவிழா 7ஆம் நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக.15

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் சிறப்பு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

7 ஆம் நாள் நிகழ்வு, நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர், இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் சீடர் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க, யா / சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி ஓய்வு நிலை அதிபர் பிரம்மஸ்ரீ வரத ராஜசர்மா ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாக சங்கானை பிரதேச செயலர் திருமதி கவிதா உதயகுமார், சிறப்பு அதிதியாக ஊர்காவற்றுறை உதவிப் பிரதேச செயலர் திருமதி பிரணவசொரூபி சிவகரன் மற்றும் மூளாய் வதிரன் புலோ ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய உப தலைவர் கார்த்திகேசு பார்த்தீபன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

மூளாய் ஞான ஒளி அறநெறிப் பாடசாலை மற்றும் வட்டுக்கோட்டை கற்பகப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர்.

விசேட நிகழ்வாக ஸ்ரீமதி சைலஜாவின் இசைக்கச்சேரி நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ச-45)

# நல்லைக்குமரன் மலர் வெளியீடு!

யாழ்ப்பாணம், ஓக. 15

நல்லூர் கந்தனின் பெருந்திருவிழாவினை முன்னிட்டு யாழ். மாநகரசபையின் சைவ சமய விவகாரக் குழுவினால் நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழா நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த வருடத்துக்குரிய 'யாழ் விருது' யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மகப்பேற்று மருத்துவ நிபுணர் ந.சரவணபவனுக்கு வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசாவும் சிறப்பு விருந்தினராக முன்னாள் யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-22)

# நான்கு நூல்களின் அறிமுகமும் உரையாடலும்

யாழ்ப்பாணம், ஓக.15

மந்தாகினி குமரேஷின் வள்ளியும் ஜாஸ்மினும், இரை தேடும் பறவைகள், புரிதல், மிட் நைட் டோல் ஆகிய நான்கு நூல்களின் அறிமுகமும் உரையாடலும் யாழ். திருமறைக்கலா மன்ற அழகியற் கல்லூரியில் நாளை மறுதினம் சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் தர்சன் அருளானந்தம், கவிஞர் சோ.பத்மநாதன், சு.ஸ்ரீகுமரன், மருத்துவர் பஞ்சகல்யாணி, கருணாகரன், சி.ரமேஷ் ஆகியோர் நூலின் அறிமுக உரைகளை நிகழ்த்தவுள்ளனர். (ச-25)

# அருள் மழை பொழிந்திடுவாய்

நல்லைப் பதியுறையும் நல்லை நகர் நாதனே
அறந்தனைக் காத்து மறந்தனை அழித்திடுவாய்
அகங்காரந்தனை அழித்து அருள் மழை
பொழிந்திடுவாய்...
கலியுகக் கந்தனே கார்த்திகை மைந்தனே
கிலிதனைப் போக்கியே பூமி வளம் பெற
அருளிடுவாய்....
நலம் பல அளித்து தீயவற்றை அழித்திடுவாய்
வண்ண வடிவேலவனே புள்ளி மயில் வாகனனே
சேவற் கொடியோனே எமை சேமமுறக்
காத்திடுவாய்.....

சி.மகாலட்சுமி
கொக்குவில்

# சந்நிதி அரசனே...!

அண்டசராசரங்களை ஆளும்
சந்நிதி அரசனே!
அப்பனுக்கு அப்பனான வள்ளி
மணவாளனே!!
பக்தர் பசி போக்கும் அன்னதான
கந்தனே!!!
ஐந்து தலை நாகம் புடைசூழ!
வெள்ளி மயிலிலும் எழுந்தருளி!!
அல்லலுறும்
அடியவர் துயர் துடைக்க!!!
ஓர் முறை நீ வாராயோ!
என் ஐயனே
கல்லோடை குமரனே!!!.

த.பிருந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொட்டு விலகல் கூட்டணி செயலாளராக ரமேஷ்?

கொழும்பு, ஒக. 15

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் ரணில் ஆதரவு அணி உறுப்பினர்களால் ஆரம்பிக்கப்படவுள்ள புதிய அரசியல் கூட்டணியின் செயலாளராக அமைச்சர் ரமேஷ் பத்திரண நியமிக்கப்படவுள்ளார்.


கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் இந்தத் தகவலை வெளியிட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து பரந்து பட்ட அரசியல் கூட்டணியை உருவாக்கவுள்ளனர். அதற்கான பேச்சுகள் இடம்பெற்றுவருகின்றன.

கூட்டணியின் பொதுச்செயலாளர் பதவிக்கு அமைச்சர் ரமேஷ் பத்திரணவின் பெயர் முன்வைக்கப்பட்டுள்ளது.

தலைவர் பதவிக்கு வருபவர் தொடர்பான அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும்.

நாட்டின் நலன்கருதியே இந்தக் கூட்டணி உதயமாகின்றது.- எனவும் இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் குறிப்பிட்டுள்ளார். (ச-44)




# காங்கேசன் - நாகை படகுச்சேவை செய்தியும் உதயனின் விளக்கமும்!

காங்கேசன்துறைக்கும் நாகப்பட்டினத்துக்கும் இடையிலான கப்பல்சேவை தொடர்பில் 13 ஆம் திகதிய உதயன் பத்திரிகைச் செய்தி தவறென்றும், திட்டமிட்டே தங்கள் சேவைக்கு உதயன் பத்திரிகை மட்டுமே இடையூறு விளைவிப்பதாகவும் அந்தக் கப்பல் சேவை நிறுவனத்தைச் சேர்ந்த நபரொருவர் தொலைபேசி மூலம் தெரியப்படுத்தியிருந்தார்.

எனினும் குறித்தநபர் ஒரு செய்தி தொடர்பாக நிறுவனமொன்றை அணுக வேண்டிய முறைமையை விடுத்து, தெருசண்டித்தனக்காரர் போல மிக அநாகரிகமான, தரக்குறைவான வார்த்தைப் பிரயோகங்களுடன் தமது நிறுவனம் சார்பான மறுப்பை வெளியிட்டிருந்தார். ஆயினும் அவர்போல கண்ணியமற்றவகையில் பதிலளிக்கும் பண்பு 'உதயனுக்கு' இல்லையென்பதால், குறித்த செய்தி தொடர்பான விளக்கங்களை வாசகர்களுக்காக இங்கு தருகின்றோம்.

குறித்த கப்பல்சேவை இன்று 15 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறுமெனவும், அதற்கான முற்பதிவுகளை தமது இணையத்தளத்தில் மேற்கொள்ளலாம் எனவும் அந்த சேவையை நடத்தும் நிறுவனம் அறிவித்திருந்தது. ஆனால் 15 ஆம் திகதியைத் தெரிவு செய்து அந்த இணையத்தில் முற்பதிவு செய்ய பயணிகள் முயன்றபோது 'இதுவரை குறித்த தினத்தில் பயணங்கள் எதுவும் திட்டமிடப்படவில்லை. புதிய படகுச்சேவை பற்றிய விவரங்கள் விரைவில் அறியப்படும்' என்ற அர்த்தத்திலான செய்தியே பதிலாகக் கிடைத்தது. இது குறித்து பலரும் எமது நிறுவனத்துக்கு முறையிட்டிருந்தனர். அந்த முறைப்பாடுகளின் உண்மைத் தன்மை அந்த நிறுவனத்தின் இணையத்தில் பரிசீலிக்கப்பட்ட பின்னரே குறித்த செய்தி பிரசுரமானது. (அதற்கான ஸ்கிரீன் ஷொட் இணைக்கப்பட்டுள்ளது) எனவே, குறித்த நிறுவனத்தின் இணையத்தளப் பக்கத்தில் தவறான அர்த்தம் தரக்கூடிய தன்னியக்கத் தகவலை பதிவேற்றி மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தியதன் பழியை அந்த நிறுவனம் உதயன் மீது சுமத்துவது எவ்வகையிலும் நியாயமற்றது.

குறித்த கப்பல் சேவை பிற்போடப்பட்டுள்ள தகவலை அரச தகவல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட சில இணையத்தளங்கள் 12 ஆம் திகதி மாலையே - உதயனில் செய்தி பிரசுரமாவதற்கு முதல் நாளே - பதிவேற்றியிருந்தன. இன்னமும் அந்தத் தளங்களில் குறித்த செய்தியைப் பார்வையிடமுடியும். ஆனால் அந்த இணையங்களில் தங்கள் எதிர்ப்பையோ, மறுப்பையோ காட்டத் திராணியற்ற குறித்த கப்பல் சேவை முகவர் நிறுவனத்தைச் சேர்ந்தவர், 'உதயன் மட்டுமே திட்டமிட்டு இடையூறு ஏற்படுத்துகின்றது' என்று அபாண்டத்தைச் சுமத்திக் கொண்டு பாய்வதன் பின்னால் உதயன் மீது காழ்ப்புணர்வு கொண்ட சக்தியொன்று பின்னால் இருப்பதை வாசகர்கள் புரிந்துகொள்வார்களென நம்புகிறோம். (ஆ-ர்)



# சிகிரியாவில் குளவிக்கொட்டு 70 பேர் மருத்துவமனையில்

கொழும்பு, ஒக. 15

சிகிரிய சிங்கத்தின் பாதத்திலிருந்த குளவிக்கூடு கலைந்து குளவிகள் கொட்டியதில் சுற்றுலாப் பயணிகள் 70 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் 26 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தற்போது, சிகிரியாவுக்குள் நுழைவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதென பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# ஜனாதிபதித் தேர்தல் 408 முறைப்பாடுகள்

கொழும்பு, ஒக.15

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நேற்றுமுன்தினம் வரை 408 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 255 முறைப்பாடுகளும், மாவட்டத் தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத் துக்கு 137 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

மாவட்ட தேர்தல் முறைப்பாட்டுமுகாமைத்துவ நிலையத்துக்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ஒரு முறைப்பாடும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 15 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

# ரணில், சஜித் தரப்புடன் சமத்துவக்கட்சி சந்திப்பு

கிளிநொச்சி, ஒக. 15

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ரணில், சஜித் தரப்பினர், சமத்துவக் கட்சியின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

கொழும்பில் இடம்பெற்ற இந்தச் சந்திப்புகளில் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார், கட்சியின் தவிசாளர் சு.மனோகரன் ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.

தமிழ்பேசும் மக்கள் தொடர்ந்தும் இனரீதியாகப் பல வழிகளிலும் ஒடுக்கப்படுகின்றனர். இதற்குத் தீர்வைக்காண முடியாதிருப்பது நாட்டின் தோல்வியே எனவும், அதிகாரத்தில் இருப்போரும் அதிகாரத்துக்கு வெளியே இருந்து அரசியல் செய்வோரும் இதற்கு பொறுப்பேற்க வேண்டும் என்றும் சந்திப்புக்களின்போது சமத்துவக் கட்சியினர் வலியுறுத்தியுள்ளனர். (ம-113)

3 ஆண்டுகளுக்குள்

# அரச சேவைகள் டிஜிற்றல் மயம்

அரசசேவையின் சாத்தியமான அனைத்துப் பகுதிகளிலும் டிஜிற்றல் மயமாக்கல் மற்றும் தன்னியக்க மயமாக்கல் ஊடாக இலத்திரனியல் கட்டமைப்பு மூலம் அரச நிர்வாக முறைமையை அறிமுகப்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதன்படி 2025 ஆம் ஆண்டிலிருந்து 3 ஆண்டுகளுக்குள், அரசசேவையை டிஜிற்றல் மயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

மேலும் அனைத்து அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுவோர் குறைந்தபட்சம் ஆயிரம் ரூபா மாதாந்த பங்களிப்புடன், சலுகைகளை அனுபவிக்கும் வகையில் 2025 ஜனவரி முதல் மருத்துவக் காப்புறுதி முறையை நடைமுறைப்படுத்துவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (ச-இ)



இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தேசிய ஆக்கத்திறன் விருது - 2024 க்கு பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாணவர்களுக்கு பிரதேசமட்ட கட்டுரை, சித்திரப் போட்டிகள் அண்மையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்டன. (ச-45-9)

# நிர்வாகசபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக.15

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டம் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் சி.கா.கமலநாதன் தலைமையில் யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கூட்டத்தில் அனைத்துச் செயற்குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார். (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தமிழால் ஒன்றாகினும் தளத்தால் வேறுவேறு

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரைக் களமிறக்கும் உரிமை தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு இருக்கின்றது. ஆனால், அந்தவிவகாரத்தை அவர்கள் வடக்கு - கிழக்குக்குள் வைத்துக்கொள்ளவேண்டும் என்று எச்சரித்திருக்கின்றார் ஜனாதிபதித் தேர்தலில் சஜித்துக்குச் சார்பாகக் களமிறங்கியிருக்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரான மனோ கணேசன். தமிழ்ப் பொதுவேட்பாளரைக் களமிறக்கும் முடிவை ஆரம்பம் முதலே எதிர்த்துவந்த மனோ கணேசன், இப்போது 'பொதுவேட்பாளர் விவகாரத்துக்கு எல்லை நிர்ணயம்' செய்திருக்கின்றார்.

தேசிய வேட்பாளர் ஒருவருடன் பேச்சுகளை நடத்தி - இணக்கப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்படுத்தி-அதன்மூலம் தமக்கான கோரிக்கைகளை வடக்கு, கிழக்கிலுள்ள தமிழர்கள் வென்றுகொள்ளலாம் என்பதுதான் மனோ கணேசன் பொதுவேட்பாளர் விடயத்தை ஆரம்பம் முதல் எதிர்ப்பதன் பின்னாலுள்ள பொதுப்புரிதல். மலையக மக்களுக்கு அடிப்படைச் சம்பளத்தை உயர் நிலையில் பேணுவதையும், காணித் துண்டுகள் வழங்குவதையும், வீடுகளை அமைப்பதையும், அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதையும் மையமாக வைத்து சஜித்துடன் சில உடன்பாடுகளை எட்டிக்கொண்டு அதன் அடிப்படையில் சஜித்தை ஆதரிக்கும் மனோ கணேசன், அதே அளவுகோலால் ஈழத்தமிழர்களின் பிரச்சினைகளையும் நோக்கியதன் விளைவுதான் அவருடைய 'புகைச்சலின்' பின்னாலுள்ள சூட்சுமம்.

தமிழ் அரசியல் தலைவர்களில் ஒருவரான மனோ கணேசன் ஒரு விடயத்தை ஆறஅமர இருந்து சிந்தித்துணர வேண்டும். ஈழத்தமிழர்களும் மலையகத் தமிழர்களும் மொழியாலும், உணர்வாலும் ஒன்றானவர்கள்தான். ஆனால், அவர்களுக்கு இந்த நாட்டில் இருக்கும் பிரச்சினைகள் வெவ்வேறானவை. ஊதிய உயர்வையோ, காணித்துண்டுகளையோ கோரிய போராட்டம் ஈழத் தமிழர்களுடையதல்ல. சிங்களப்பேரினவாதத்தின் அடக்குமுறையை இனியும் பொறுத்துக்கொள்ள முடியாது என்ற நிலையில், தனிநாடு கேட்டுப் போராடியவர்கள்தான் ஈழத்தமிழர்கள். எனினும் தமக்கான போராட்டத்துக்குள் மலையக மக்களின் விடிவையும், அவர்களின் நில உரிமையையும் ஈழத்தமிழர்கள் சேர்த்துக்கொண்டனர். மலையக மக்களின் பிரச்சினைகள், வடக்கு- கிழக்குத் தமிழர்களின் பிரச்சினைகளில் இருந்து வேறுபட்டவை என்பதற்காக 'மலையகத்தோடு உங்கள் கோரிக்கைகளை மட்டுப்படுத்திக்கொள்ளுங்கள்' என்று ஒருபோதும் தமிழ் அரசியல் கட்சிகளோ, தமிழ்ப் போராளிகளோ சொன்னது கிடையாது. தற்போது தமிழர்களின் போராட்டப் பலமும், ஏதுநிலைகளும் இல்லாதொழிந்த காரணத்தால், 'சமஷ்டி' என்பது தமிழர்களின் இரண்டாம்நிலைக் கோரிக்கையாகக் காணப்படுகின்றது. ஐந்தல்ல, பத்தல்ல எழுபதாண்டு காலப் பயணம் இது. ஏழு தசாப்தத்துக்கு மேற்பட்ட போராட்டம் இது. இந்த நீண்டதும் நெடியதுமான வரலாற்றில் சஜித்தை மட்டுமல்ல அவருடைய தந்தையார் ரணசிங்கவையும், ரணிலை மட்டுமல்ல அவருடைய மாமனார் ஜே.ஆரையும் பார்த்தவர்கள் தமிழர்கள். 'பழம் தின்று விதைபோடுதல்' என்பதான ஓர் சொல்லடை தமிழில் வழக்கில் உள்ளதல்லவா? அது தமிழினத்துக்குக் கச்சிதப் பொருத்தம். எத்தனை ஒப்பந்தங்களை இந்த இனம் பார்த்திருக்கும். எத்தனை கிழித்தெறிதல்கள், எத்தனை தீக்கிரைகள், எத்தனை புறக்கணிப்புகள்... இவற்றை எண்ணித்தான் முடிக்க முடியுமா?

ஈழத்தமிழர்களின் குரல்கள் செவிசாய்க்கப்பட வேண்டுமாயின் அவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டுமாயின், வடக்கு - கிழக்குக்கு வெளியில் வாழும் மலையகத் தமிழர்களும், முஸ்லிம்களும் அது தொடர்பில் குரலெழுப்புவது மிக அவசியமும் அடிப்படையுமாகும். இவ்வாறிருக்கையில், 'உங்கள் கோரிக்கைகளை வடக்குக்குள் வைத்துக்கொள்ளுங்கள் வடக்குக்கு வெளியில் வரவேண்டாம்' என்று 'தமிழ்த் தலைவர்' ஒருவர் தெரிவிப்பதானது கலப்பின்றிய அபத்தமன்றி வேறில்லை. 70 ஆண்டுகால ஆயுத, அரசியல் போராட்டத்தை நடத்திய பின்னரும், தமிழினம் இன்னமும் தனக்கான விடியலை அடையவில்லையென்றால், அதற்கு வரலாறு நெடுகிலும் மனோகணேசன்கள் நிறைந்திருப்பதும் ஒரு காரணம்தானே!.




# தோட்டத் தொழிலாளர் வேதனம் 1,700/=

## மீண்டும் வர்த்தமானி

**கொழும்பு, ஓக.15**

**பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த வேதனத்தை 1,700 ரூபாவாக அதிகரித்து மீண்டுமொரு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.**

தொழில் ஆணையாளர் எம்.கே.கே.எஸ்.ஜயசுந்தரவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, நாளாந்த அடிப்படை வேதனமாக 1,350 ரூபாவும், உற்பத்தி அடிப்படையிலான ஊக்குவிப்புக் கொடுப்பனவாக 350 ரூபாவுமாக 1,700 ரூபா வழங்கப்படவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தமானி அறிவித்தலுக்கு ஏதேனும் ஆட்சேபனைகள் காணப்படுமாயின் அதற்கான காரணங்களுடன் எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த வேதனத்தை 1,700 ரூபாவாக அதிகரித்து ஏற்கனவே வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருந்ததையடுத்து மீளப் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## தோட்டத் தொழிலாளர்களும் 'அஸ்வெசும'வில் உள்ளீர்ப்பு

கொழும்பு, ஓக.15

மலையக பெருந்தோட்டப் பகுதியில் லயன் வீடுகளில் வாழும் தோட்டத் தொழிலாளர்களையும் 'அஸ்வெசும' நலன்புரிக் கொடுப்பனவுகள் வேலைத்திட்டத்தில் உள்வாங்குவதற்கு, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி உள்ளது.

லயன் வீடுகளில் வசிக்கும் வெவ்வேறு குடும்பங்களை தனித்தனியே, இந்தத் திட்டத்தில் உள்வாங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச-இ)

## 'ஸ்டார் லிங்' க்கு அனுமதியளிப்பு

கொழும்பு, ஓக.15

இலங்கையில் செய்மதித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இணைய சேவைகளை வழங்குவதற்காக எலான் மஸ்க்குக்குச் சொந்தமான 'ஸ்டார் லிங்' தனியார் நிறுவனத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.


இதன் மூலம் நாட்டின் எந்தவொரு மூலையிலிருந்தும் செயற்கைக் கோள் மூலமான இணைய சேவைகளைப் பெறமுடியும். எதிர்காலத்தில் இலங்கையின் தொழில்நுட்பத் துறையில் சிறந்த சூழல் உருவாகும் என தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)

## எம்.பி.க்களுக்கு மேலதிக துப்பாக்கி

கொழும்பு, ஓக.15

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மேலதிக ஆயுதம் வழங்குவதற்கு பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் உயிர் மற்றும் உடைமைகளைப் பாதுகாத்துக் கொள்ள ரி-பீடர் ரக துப்பாக்கி வழங்கப்பட உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)



## முட்டை விலை வீழ்ச்சி

கொழும்பு, ஓக.15

முட்டை இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியதையடுத்து, விலைகளில் வீழ்ச்சி ஏற்பட ஆரம்பித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. எதிர்கால பண்டிகைக் காலங்களை கருத்திற்கொண்டு முட்டைகளின் விலையை குறைக்க அரசாங்கம் முட்டை இறக்குமதி நடவடிக்கையை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

**நாளை**

**16.08.2024**

வெள்ளிக்கிழமை - ஆடி - 31

சுபநேரம் : 06.05 - 07.35

ராகுகாலம் : 10.35 - 12.05

**நாளொரு நல்வார்த்தை**

**நம்முடைய மரணத்தைப்பற்றி நாம் மறந்திருக்கும் வரை, அது ஒருபோதும் நமக்கானது அல்ல.**

-ஜோர்ஜ் எலியட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
## மங்கையர்க்கரசி ராஜாராம்

(முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர் – விஞ்ஞானம், முன்னாள் விரிவுரையாளர் – தேசிய கல்வி நிறுவகம் – மகரகம, தொண்டமானாறு வெளிக்கள நிலைய உப தலைவர், யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் முன்னாள் செயற்குழு உறுப்பினர், யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட சபையின் முன்னாள் உறுப்பினர், முன்னாள் தலைவர் – வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் )

மலர்வு
21.01.1943

உதிர்வு
05.08.2014

திதி:- தசமி (15.08.2024)

அன்பு. நேர்மை. இறைபக்தி. கடமையுணர்வு எமது குடும்ப முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட எனது அன்புத் துணைவியின் பத்து ஆண்டு நினைவு தினமாகிய இன்று (15.08.2024) வியாழக்கிழமை ஆடிவளர்பிறை தசமி திதியில் நினைவு கூர்ந்து எல்லாம் வல்ல கௌரி அம்பாள் சமேத திருக்கேதீஸ்வர பெருமானதும் சாவகச்சேரி கற்குழி அருள்மிகு பத்திரகாளி சமேத வீரபத்திரர் பெருமானதும் பாதாரவிந்தங்களை அடைய மனதாரப் பிரார்த்திக்கும்....

**இ.ராஜாராம்**
**(பாசமிகு கணவர் - சமாதான நீதவான்)**
**அன்புத் தம்பிமார், அன்புத் தங்கை, மைத்துனி, மைத்துனர் மற்றும் மருமக்கள்.**

**இல.06, கற்குழி,**
**முதலாம் ஒழுங்கை,**
**தபாலக வீதி ஊடாக சாவகச்சேரி.**
**021 227 1493, 077 723 8528**

# நீங்கா நினைவில் இரண்டாம் ஆண்டு

தோற்றம்
07 . 11 . 1936



மறைவு
16 . 08 . 2022

அமரர்
## பிலிப் அருளானந்தம் (செபமாலை)

விண்ணகத் தந்தையே! விண்ணகப் பிறப்பில் இரண்டு ஆண்டுகளை நிறைவு செய்யும் எம் பப்பாவுக்காக அவரது இவ்வுலக வாழ்வின் நற்பண்புகளுடான அழகான ஆளுமைக்காக நன்றி கூறுகின்றோம்.

பப்பாவின் பிரிவு எமக்கு பேரிழப்பாக இருந்தாலும் அவரின் வழிகாட்டுதல்களோடும் பாசமான நினைவுகளோடும் பயணிக்கின்றோம்.

பப்பாவின் ஆன்மா உமது இன்பமான சந்நிதானத்தில் அமைதியுடன் இளைப்பாற அருள் கூர்ந்திடும்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நாளை (16.08.2024) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு சுண்டிக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

**இல. 36/2, கோவில் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

(CS/55927) J-1


# துயரம்!

காஸா, ஓக. 15

காஸாவில், பிறந்து நான்கு நாட்களேயான பச்சிளம் இரணைக் குழந்தைகள் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளன. குழந்தைகளின் பிறப்புச் சான்றிதழைப் பெறுவதற்காக, அவற்றின் தந்தை மருத்துவமனைக்குச் சென்றிருந்த நிலையில், இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் அந்தக் குழந்தைகளும், அவற்றின் தாய் மற்றும் பாட்டியும் கொல்லப்பட்டுள்ளனர் என்று காஸாவில் செயற்படும் போர்க் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம)

# மரண அறிவித்தல்

தோற்றம்
08 . 02 . 1946



மறைவு
11 . 08 . 2024

## வேலாயுதம் அரியநாயகம்

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியைப் பிறப்பிடமாகவும், கொய்யாத் தோட்டத்தை வதிவிடமாகவும் கொண்ட வேலாயுதம் அரியநாயகம் அவர்கள் கடந்த (11.08.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - ராணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், பரிமளா அவர்களின் அன்புக் கணவரும், யூஜினியின் அன்புத் தந்தையும், மதனதீபனின் (லண்டன்) அன்பு மாமனாரும், விகாஷா, நிஷித் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ் சென்றவர்களான இராசநாயகம், செல்வநாயகம் (கடவுள்), குணநாயகம் (குணம்) மற்றும் பிறேமச்சந்திரன், உதயகுமார் (பிரான்ஸ்), கமலாதேவி, சுசிலாதேவி, நாகேஸ்வரி (தேவி) (பிரான்ஸ்), சுலோஜனாதேவி (பேபி) (நெதர்லாந்து) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான பாக்கியராஜா, குணசேகரம் மற்றும் சந்திரசேகரம் (பிரான்ஸ்), சிவராசா (நெதர்லாந்து), பிரான்ஸிஸ்கா (றஞ்சி), ஜெசி (பிரான்ஸ்), காலஞ்சென்ற ருக்மணி, யோகம்மா (கனடா), ராஜேஸ்வரி (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அல்போன்ஸ் (கனடா), காலஞ்சென்ற தெய்வேந்திரம் ஆகியோரின் சகலனும், சசிகலா, சசிகரன் (ராஜா), சசிதரன் (கண்ணன்), தணிகைக்குமரன் (குமரன்), கஜன், பிரதீப், தினேஸ்குமார், பிரசாந், பிரதாப், பிரியங்கா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பிராங்கிலின், றொனால்ட், ஆர்னோல்ட், விதுஷன், ஷோபி, அர்ச்சானா ஆகியோரின் பெரியதந்தையும், டீலியா, டினோத் (கனடா) ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நாளை (16.08.2024) வெள்ளிக்கிழமை, முற்பகல் 9.00 மணிமுதல் 10.00 மணிவரை கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு முற்பகல் 11.30 மணியளவில் கீரிப்பல்லி சேமக்காலை, கரவெட்டியில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 503 9237**
**077 383 6404**

26/2A **புது வீதி,**
**கொய்யாத்தோட்டம்.**

(CS/55930) J-1

# மரண அறிவித்தல்

மண்ணில்
07 . 09 . 1973



விண்ணில்
12 . 08 . 2024

## சுந்தரலிங்கம் பன்னீர்ச்செல்வன்

**(ஆசிரியர் - யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவன் (92 Batch))**

நெடுந்தீவு கிழக்கை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 59, மருதடியை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் பன்னீர்செல்வன் (ஆசிரியர் - யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம், பழைய மாணவன் - யா/ இந்துக்கல்லூரி 92 Batch) கடந்த 12.08.2024 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம் மற்றும் சரஸ்வதி தம்பதியரின் இளைய புதல்வனும், திரு.திருமதி ஜெயறஞ்சன் - திலகவதி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயறஞ்சினியின் பாசமிகு கணவரும், லினோஷ்றாம், லக்ஷானி, கரிஷ்றாம் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாமினி (UK), தமிழ்மாறன் (UK), அமரர் குமுதினி (ஆசிரியர் -UK) சாந்தினி (UK) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திவாகர் (Oman), ஜெயமாலினி, றஞ்சித், தேவகுமார், இதயகுமார் (அசோக்), மூர்த்தி (UK), கௌரி (UK), லக்ஸ்மன் (UK) ஆகியோரின் மைத்துனரும், கார்த்திகா திவாகரின் (Oman) அன்பு சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம் மாணிக்கம் வைரவர் வீதியில் உள்ள அவரது மனைவி இல்லத்தில் இன்று (15.08.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**T.P: 075 318 5628**
**077 959 1327**

(CS/1129) J-1

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்கான தீர்வு கூட்டுத்தீர்வாக அமையட்டும்

## ஜீவன் தொண்டமான் வலியுறுத்து



**கொழும்பு, ஓக.15**

**தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரமானதொரு அரசியல் தீர்வு காணப்படவேண்டுமெனில் அது கூட்டுத்தீர்வாகவே அமையவேண்டும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தென்னாபிரிக்காவில் நிறுவப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவில் பாதிக்கப்பட்ட மக்கள் மட்டுமல்ல, பிரச்சினைகளை உருவாக்கியவர்களும் உள்ளே இருந்துதான் தீர்வை உருவாக்கினர். அவ்வாறு இல்லாவிடின் பிரச்சினை நீளும்.

என்னைப் பொறுத்தவரையில், நிலையானதொரு தீர்வைக் காணவேண்டுமெனில் அது கூட்டுத் தீர்வாகவே அமையவேண்டும்.

வடக்கு, கிழக்கு பிரச்சினையை வைத்து வாக்குவேட்டை நடத்த முற்படக்கூடாது.

என்னைப்பொறுத்தவரையில் அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் - என்றார். (ச-44)

## தரப்பரிசோதனையில் 51 மருந்துகள் தோல்வி

கொழும்பு, ஓக.15

2024 ஆம் ஆண்டில் இதுவரை மொத்தம் 51 மருந்துகள் தரப் பரிசோதனையில் தோல்வியடைந்துள்ளன.

இலங்கை சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இந்தத் தரப் பரிசோதனையில் தோல்வியடைந்த மருந்துகளில், சுமார் 27 மருந்துகள் இந்தியாவில் தயாரிக்கப்பட்டவை. 07 மருந்துகள் உள்நாட்டிலும் ஏனையவை சீனா, கென்யா, பாகிஸ்தான், ஜப்பான் மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை 2023 இல் மருந்துகளின் தரக்குறைபாடுகள், நாட்டில் உயிரிழப்புகள் உட்பட்ட சம்பவங்களுக்கு காரணம் என்று கண்டறியப்பட்டிருந்தன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)



## செஞ்சோலைப் படுகொலை உணர்வுபூர்வ அஞ்சலி!

யாழ்ப்பாணம், ஓக.15

ஸ்ரீலங்கா இராணுவத்தின் விமானப்படையினரின் மிலேச்சத்தனமான வான் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களுக்கான அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று புதன்கிழமை செஞ்சோலை வளாகத்தில் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

உயிரிழந்த உறவுகளுக்கு சுடரேற்றி, அக வணக்கம் செலுத்தி மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

நிகழ்வில் வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன், முன்னாள் புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் சி.குகநேசன் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள், பொதுமக்கள், எனப் பலர் கலந்துகொண்டனர்.

கடந்த 2006 ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்த மிலேச்சத்தனமான தாக்குதலில் பாடசாலை மாணவர்கள் 53 பேர் உட்பட 61 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-19)



## சீனத் தூதுவரைச் சந்தித்த தமிழ் எம்.பி.கள்

கொழும்பு, ஓக.15

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சீனத் தூதுவருடன் பேச்சு நடத்தியுள்ளனர்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சாணக்கியன் ஆகியோரே இலங்கைக்கான சீனத் தூதுவர் கியூ சென்ஹோங்குடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதன்போது தற்போதைய விவகாரங்கள் மற்றும் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் கரிசனைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன. (ச-இ)

## மோட்டார் ஷெல்கள் இயக்கச்சியில் மீட்பு

யாழ்ப்பாணம், ஓக.15

பளைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இயக்கச்சிப் பகுதியில் இரண்டு மோட்டார் ஷெல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

காணி உரிமையாளர் ஒருவர் வேலிக்கு தூண் நடுகை செய்வதற்காக கிடங்கு வெட்டியபோது குண்டுகள் அவதானிக்கப்பட்ட நிலையில் பளைப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

குண்டுகளை மீட்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டனர். (ச-45-100)

## தினம் தெரியுமோ?

பழமிருக்கச் சுளை விழுங்கிற ஆக்கள் இப்பவும் எங்களுக்குள்ள நிறையப்பேர் இருக்கினம். அப்பிடியான சிலர் போன 9 ஆம் திகதி அம்பிட்டுப் போட்டினம். வழக்கமா யாழ்ப்பாணத்துக்கு வாற எல்லா ரெயினும் காங்கேசந்துறையிலதான் நிப்பாட்டிறவை. இப்ப தண்டவாளவேலை நடக்கிறதால கொழும்புக்கு ரெயின் போய்வாறேலை. யாழ்ப்பாணத்தில இருந்து அநுராதபுரம் வரைக்கும் தான் ரெயின் போய் வாறது. பகலிலதான் ரெயின் ஓட்டம். இரவு காங்கேசன்துறையிலதான் ரெயின் நிக்கும். வழமை மாதிரி அண்டைக்கும் ரெயின் இஞ்சின் காங்கேசனில நிண்டிருக்கு. அந்த ஸ்ரேசன் மாஸ்ரர் தற்செயலா இரவு வெளியில வரேக்கதான், ரண்டுமூண்டு பேர் ரெயின் இஞ்சினுக்கு கிட்ட நிண்டிட்டு ஓடியிருக்கினம். தன்னைக் கண்டிட்டு எதுக்கு இவங்கள் ஓடுறாங்கள்? எண்டு அவர் போய்ப்பார்த்தால், அங்க இஞ்சினில இருந்து நாலு பரலுக்குள்ள டீசல் எடுத்தபடி இருந்திருக்கு. இஞ்சினுக்கு டீசல் அடிக்கிற இடத்தில ஒரு பூட்டு இருக்கும், அதைத் திறக்கிற சாவியையும் அந்தப் பூட்டோட விட்டிட்டுத்தான் டீசல் எடுத்தவை ஓடியிருக்கினம்.

இப்பிடி இஞ்சின் நிக்கேக்க , அதின்ர பூட்டைத் திறந்து ஆருக்கும் தெரியாமல் டீசலை எடுக்கிற தெண்டது சின்ன வேலையில்லை. அந்தப் பூட்டின்ர திறப்பு அநுராதபுரத்திலதான் இருக்குது. ஆனால் டீசல் எடுத்த கள்ளர் திறப்பாலதான் இஞ்சி னைத் திறந்து டீசலை எடுத்திருக்கினம். அப்ப அவைக்கு இஞ்சின் திறப்பைக் குடுத்தது ஆர்? ரெயில்வே டிப்பார்ட்மென்டில வேலை செய்யிற ஆரோதான் அதைக்குடுத்திருக்க வேணும்.இஞ்சினைப்பராமரிக்கிற வேலை செய்யிறவை மூலமாத்தான் திறப்பு கைமாறியிருக்க வேணும் எண்டு சந்தேகம். அதோட இன்னுமொரு டவுட்டும் இருக்குது. அந்தத் திறப்பு ஒரிஜினலோ இல்லாட்டி கள்ளத்திறப்போ எண்டது தான் அந்த டவுட். அநுராதபுரத்தில இருக்கிற திறப்பை எடுத்து அதே மாதிரி கள்ளத் திறப்பொண்டைச் செய்து தான் இப்பிடி டீசல் எடுக்கிற விளையாட்டைக் காட்டியிருப்பினம் எண்டு விசயம் தெரிஞ்சவை சொல்லுகினம்.

இதில பகிடி என்னெண்டால், இந்த டீசல் களவு பற்றித் தெரியாத ரெயில்வே டிப்பார்ட்மெண்ட்காரர் "இந்த இஞ்சின் சரியா டீசல் குடிக்குது. அதுக்கு என்ன காரணம் ? எண்டு மெக்கானிக்மாரைக் கொண்டந்து காட்டி யிருக்கினம். அவையும் ஏதோ திருத்திப்போட்டு "இனி ஒரு பிரச்சினையுமில்லை. எல்லாம் சரியாகிட்டுது" எண்டிட்டு போயிருக்கினம். அதுக்குப் பிறகும் இஞ்சின் 'டீசல் குடிக்கிறதை' நிப்பாட்டேலையாம். இப்பதான் டிப்பார்ட்மெண்ட் காரருக்கு அந்த டீசலைக் குடிச்சது ஆரெண்டு விளங்கியிருக்குது. பத்துப் பதினைஞ்சு மாதமா உந்த டீசல் குடிக்கிற விளையாட்டு நடந்திருக்காம். ஆனால் இப்பதான் பிடிபட்டிருக்கு. ஒரு நாளைக்கு 100 லீற்றர் டீசல் படி பாத்தாலும் எவ்வளவு டீசலை உறிஞ்சியிருப்பினமெண்டு கணக்குப் போட்டுப் பாருங்கோ. இந்த டீசல் உறிஞ்சின கள்ளர் பிடிபடாமல் ஓடினதும், அவையைக்கண்டுபிடிக்கிறதில பொலிஸ் காரர் அக்கறை இல்லாமல் இருக்கிறதும் இன்னும் கனக்கச் சந்தேகத்தைக் கிளப்பத்தான் செய்யுது. எதுக்கும் வெய்ட் பண்ணுவம். மலிஞ்சால் சந்தைக்கு வராமலோ போகப்போகுது?

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைன் படை ஊடுருவலால் திக்குமுக்காடுகின்றது ரஷ்யா

கீவ், ஓக.15

உக்ரைன் படையினரின் புதிய தாக்குதல்களைத் தொடர்ந்து ரஷ்யா தனது பெல்கொரொட் எல்லைப் பிராந்தியத்தில் அவசரகால நிலையை அறிவித்துள்ளது.

ரஷ்யாவுக்குள் ஊடுருவியுள்ள உக்ரைன் படையினர் பல சதுர கிலோ மீற்றர் பரப்பைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளனர். இந்தநிலையில், பெல்கொரொட் எல்லையில் ரஷ்யா அவசர நிலைமையைப் பிரகடனம் செய்துள்ளது.

பெல்கொரொட் பிராந்தியத்தில் நிலைமை தொடர்ந்தும் கடினமானதாகவும், பதற்றமானதாகவும் காணப்படுகின்றது என பெல்கொரொட் ஆளுநர் தெரிவித்துள்ளார். எதிர்பாராத விதத்தில் தனது தந்திரோபாயங்களில் மாற்றங்களை ஏற்படுத்திக்கொண்டுள்ள உக்ரைன் ரஷ்யாவுக்குள் ஊடுருவியுள்ளது. உக்ரைன் படையினர் முன்னேறத் தொடங்கியதைத் தொடர்ந்து பெல்கிரொட்டின் எல்லைப்பகுதிகளில் இருந்து பொதுமக்கள் அவசரஅவசரமாக வெளியேற்றப்பட்டனர்.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ரஷ்யாவுக்குள் வேறுநாட்டுப் படையொன்று நுழைந்துள்ளமை இதுவே முதல்தடவையாகும். (எ-இ)

## கிரீஸில் காட்டுத் தீ



லண்டன், ஓக.15

கிரீஸ் நாட்டின் தலைநகர் ஏதென்ஸின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பரவிய காட்டுத் தீயில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வடக்கு ஏதென்ஸில் உள்ள வ்ரிலிசியா நகரிலுள்ள கடையொன்றில் இருந்து காட்டுத் தீயில் எரிந்த நிலையில் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

ஏதென்ஸின் வடக்கே 35 கிலோ மீற்றர் (22 மைல்) தொலைவில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது. காட்டுத் தீ வேகமாகப் பரவி வருவதால் வீடுகள், வணிக நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு தீயணைப்பு வீரர்கள் எச்சரிக்கை விடுத்ததை அடுத்து ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். இந்த தீப் பரவல் இவ்வாரம் முழுவதும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-இ)

## பதவி விலகும்







கொழும்பு, ஓக.15

ஜப்பான் பிரதமர் ஃபுமியோ கிஷிடா எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதல் பதவியில் இருந்து விலகிக்கொள்வதாக அறிவித்துள்ளார்.

பிரதமர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் அவர் வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார். (எ-இ)


ஈரானின் துணை ஜனாதிபதியாகத் தேர்வுசெய்யப்பட்ட ஜாவித் ஜாப்ரி திடீரெனப் பதவி விலகியுள்ளதால் ஈரான் அரசியலில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. தனது 'எக்ஸ்' வலைத்தளப் பக்கத்தில் அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். இதற்கான அதிகாரபூர்வ காரணங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. ஆனால் தான் முன்மொழிந்த 19 உறுப்பினர்களைக் கொண்ட புதிய அமைச்சரவை நியமனம் தொடர்பாக அதிருப்தி அடைந்து, இராஜினாமாச் செய்ததாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (எ-இ)

## வேலைக்கு ஆள் தேவை

நல்லூரில் அமைந்துள்ள
Mangalapathy Ayurveda Pvt Ltd
நிறுவனத்தில் தயாரிப்பு மற்றும் துப்புரவு வேலைகளுக்கு ஆள் தேவை.
**சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்**
தொடர்புகளுக்கு:
**076 140 4074**

## துயர் பகிர்கின்றோம்

### முத்து சின்னையா (தம்பி ஐயா)



எழுதுமட்டுவாழைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட முத்து சின்னையா (தம்பி ஐயா) கடந்த (12.08.2024) திங்கட்கிழமையன்று இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலம் சென்றவர்களான முத்து-சீதேவி தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்ற பூமணி அவர்களின் அன்புக் கணவரும் யோகலிங்கம் (சுவிஸ்) புஸ்பலதா (சுவிஸ்), தனலிங்கம், புஸ்பதேவி (சுவிஸ்), புஸ்பகலா, புஸ்பலீலா, தவலிங்கம், புஸ்பறஞ்சிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் வனேஷா (சுவிஸ்), இராசேந்திரம் (சுவிஸ்), கலிஸ்ரா, ஜோஸ்கான் (சுவிஸ்) சச்சி, துரைரட்ணம் ஆகியோரின் மாமனாரும் றஜினா,றஜிதன், றஜிலதா, விர்ஜீனியா, சாஜிரா, லீறோய், ஜேம்சன், ஜெப்ரசன், ஜேவிட்சன், ஜேன்ரூத்சிகா, ஜெபோல்சன், பத்மினி, ஆரோன், நாகவி ஆகியோரின் பேரனும் சாமுவேல், லைய்னானி ஆகியோரின் பூட்டனாரும் வீரகத்தி, நாகம்மா, இராசம்மா, செல்லம்மா, தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (15.06.2024) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 1135)V-1

## ஆதன பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 20, ஈச்சமோட்டை வீதியில் அமைந்துள்ள ஆதன இலக்கம் 7/14 எமது ஆதனவரிப் பதிவேட்டில் J.N. தம்பரும் J.H.J திசவீரசிங்கியும் என காணப்படுகின்றது. இவ்வாதனத்தை யாழ்ப்பாணம், சுண்டிக்குளி, இல-5/4 ஈச்சமோட்டை வீதியைச் சேர்ந்த செல்லர் இராசதுரை என்பவர் பிரசித்த நொத்தாரிசு க.சிவலிங்கம் முகதாவில் 1974.12.04ல் 1706ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் விஸ்தீரணம் நெற்பரப்பு 2 குளி 71/2 இனை தனது மனைவியான இராசதுரை பெண் கனகம்மாவிற்கு வழங்கியுள்ளார்.

இராசதுரை கனகம்மா என்பவர் பிரசித்த நொத்தாரிசு வே.நடராசா முகதாவில் 1991.02.10ல் 2749ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் மேற்படி அளவுகொண்ட அதே ஆதனத்தை தனது பேரப்பிள்ளைகளான தேவநாயகம் யூலியற் உதயதர்சினி, தேவநாயகம் உஷாந்தினி, தேவநாயகம் யஸ்மின் கலாநிதி, ஜெயராம் வினோ பிரசன்னா ஆகியோருக்கு நன்கொடையளித்துள்ளார்.

ஜெயராம் வினோ பிரசன்னா என்பவர் பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் 10.04.2005ல் 2924ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் விஸ்தீரணம் நெற்பரப்பு 2 குளி 71/2 ல் தனக்குரிய சொரியல் பங்கான 1/4 இனை தனது பேர்த்தியாகிய இராசதுரை கனகம்மாவிற்கு நன்கொடையளித்துள்ளார்.

இராசதுரை கனகம்மா, தேவநாயகம் உஷாந்தினி மற்றும் தேவநாயகம் யஸ்மின் கலாநிதி ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு T.M. அந்தோனிப்பிள்ளை முகதாவில் 06.07.2006ல் 3057ம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் விஸ்தீரணம் நெற்பரப்பு 2 குளி 71/2 ல் சீதனம் பெறுபவரின் 1/4 பங்கு அடங்கலாக கிழக்கு எல்லையில் 4 அடி பாதை அடங்கலாக தெற்குப்பக்கமாக நெற்பரப்பு 1 இனை இரத்தினம் சிவராசா பெண் யூலியற் உதயதர்சினி என்பவருக்கு வழங்கியுள்ளனர்.

இரத்தினம் சிவராசாவும் பெண் யூலியற் உதயதர்சினியும் பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் 04.06.2009ல் 5198ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் விஸ்தீரணம் நெற்பரப்பு 2 குளி 7/2. இதில் தென்கிழக்குப் பக்கமாக நெற்பரப்பு 1 அளவுடைய ஆதனத்தையும் அதற்குச் சேந்தவைகளையும் திருமதி.சரோஜா தேவநாயகம் என்பவருக்கு நன்கொடையளித்துள்ளனர்.

இரத்தினம் சிவராசாவும் பெண் யூலியற் உதயதர்சினியும் மற்றும் திருமதி.சரோஜா தேவநாயகமும் இணைந்து பெயர் திருத்தம் தொடர்பில் பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் 28.07.2009ல் 5337ம் இலக்கத்தில் திருத்தல் உறுதி ஒன்றினை நிறைவேற்றியுள்ளனர்.

தேவநாயகம் கைம்பெண் சரோஜா என்பவர் பிரசித்த நொத்தாரிசு மு.றெமிடியஸ் முகதாவில் 18.09.2017ல் 1796ம் இலக்கத்தில் நிறைவேறிய நிபந்தனை அறுதி மூலம் விஸ்தீரணம் நெற்பரப்பு 2 குளி 7 1/2. இதில் தென்கிழக்குப் பக்கமாக நெற்பரப்பு 1ம் அதற்குச் சேர்ந்தவைகளையும் இராஜசேகர் குணசேகர் என்பவருக்கு வழங்கியுள்ளார். இராஜசேகர் குணசேகர் என்பவர் பிரசித்த நொத்தாரிசு மு.றெமிடியஸ் முகதாவில் 28.01.2019 இல் 2207ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் மேற்படி அளவுடைய ஆதனத்தை தேவநாயகம் கைம்பெண் சரோஜா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று, சுண்டிக்குளி இறை, பிரதேச செயலகம் யாழ்ப்பாணம், கிராமசேவையாளர் பிரிவு J/66, யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குட்பட்ட முதலைக்குளம் வயல்" நெற்பரப்பு 2 குளி 71/2 இதில் தென்கிழக்குப் பக்கமாக நெற்பரப்பு 1 ம் மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும்.

இதன் எல்லைகள்-
கிழக்கு -பாவிலு அமிர்தநாயகத்தின் ஆதனம்
வடக்கு - இதன் மிகுதியாதனம்
மேற்கு -திரவியம் பாலசிங்கத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம்
தெற்கு - ஒழுங்கை
இதனடங்கலும் மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும்

தற்போது இவ்வாதனத்தை தேவநாயகம் கைம்பெண் சரோஜா என்பவர் தனது பெயரை எமது ஆதன வரிப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது தேவநாயகம் கைம்பெண் சரோஜா என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாநகர ஆணையாளர்**
**மாநகர சபை**
**யாழ்ப்பாணம்.**

(CR/42929) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவயதுக் கர்ப்பம் நாட்டில் அதிகரிப்பு

## சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தகவல்

**கொழும்பு, ஓக. 15**
**இலங்கையில் மீண்டும் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் இள வயதுக்கர்ப்பம் என்பன நாளுக்குநாள் அதிகரித்து வருவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சமீபத்திய ஆய்வுகள் தெரிவித்துள்ளன.**



இந்த ஆண்டில் முதல் காலாண்டில் மாத்திரம் இள வயதுக்கர்ப்பம் தொடர்பான 28 வழக்குகள் பதிவாகியுள்ளன.
இந்த இள வயதுக்கர்ப்பம் பாலியல் துஷ்பிரயோகத்தின் நேரடி விளைவாக இந்த அதிகரிப்பைக் கண்டுள்ளது.
2024ஆம் ஆண்டு முதல் பாதியில் 28 வழக்குகளும் 2023 ஆம் ஆண்டு அதே காலகட்டத்தில் 18 வழக்குகளும் பதிவாகியுள்ளன. இது 55.5 விகித அதிகரிப்பை எடுத்துக்காட்டுகின்றது.
அதேவேளை 2024 இன் முதல் ஆறு மாதங்களில் 157 கடுமையான பாலியல் துஷ்பிரயோக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ச-இ)

# இஞ்சி இறக்குமதி

கொழும்பு, ஓக. 15
இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனத்தினால் அடுத்த 3 மாதங்களில் கட்டம் கட்டமாக 3 ஆயிரம் மெற்றிக் தொன் இஞ்சியை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.
விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மற்றும் வர்த்தக, வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோர் முன்வைத்த கூட்டு யோசனைக்கே அமைச்சரவை அனுமதி வழங்கி யுள்ளது. (ச-இ)

### ரூ. 4 கோடி பெறுமதியான

# தங்க பிஸ்கட்டுடன் வர்த்தகர் சிக்கினார்

கொழும்பு, ஓக. 15
சட்டவிரோதமான முறையில் நான்கு கோடியே நாற்பது இலட்சம் ரூபா பெறுமதியான 16 தங்க பிஸ்கட்டுகளை கடத்தி வந்த வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்க விமானநிலைய முனையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.
சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகளின் சோதனையிலேயே காலியைச் சேர்ந்த 28 வயதுடைய வர்த்தகர் கைதுசெய்யப்பட்டார்.
மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க விமானநிலைய சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)




# பயிற்சிப் பட்டறை

யாழ். மாவட்ட குடிசன வீட்டு வசதிகள் தொகைமதிப்பு 2024 இன் கீழ் வட்டாரத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கான இரண்டு நாள் பயிற்சிப் பட்டறை யாழ். மாவட்டச் செயலர் ம. பிரதீபன் தலைமை யில் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் மாவட்டச் செயலக புள்ளிவிவரப்பிரிவின் பிரதிப்பணிப்பாளர். ம. வித்தியானந்தநேசன், பிரதேச செயலக புள்ளிவிவர உத்தியோகத்தர்கள், புள்ளிவிவர உதவியாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.
(ச-25, 9)

# மரண அறிவித்தல்

## திரு சிவகுரு சுந்தரலிங்கம்

**(ஓய்வுபெற்ற பிரதான கணக்காளர் மாவட்டச்செயலகம் யாழ்ப்பாணம்)**



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு சிவகுரு சுந்தரலிங்கம் நேற்று (14.08.2024) புதன்கிழமை அன்று காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு-நாகரத்தினம் தம்பதிகளின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான S.R.கந்தையா-ஜீவநாயகி தம்பதிகளின் அருமை மருமகனும் காலஞ்சென்ற மங்கையக்கரசி அவர்களின் அன்புக் கணவரும் மீனதர்ஷினி, மகிதலக்ஷனி, மஞ்சுளாதக்ஷனி காலஞ்சென்ற மயூரன் ஆகியோரின் அருமைத் தந்தையும், சிவலோகநாதன் விக்கிணேஸ்வரன், யோகசிவம், அம்புஜவல்லி ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவலேகா, தர்ஷன், ஜெகதீஸ்வரன், தாரணி, பைரவி, ஜெய்மயூரி, ஜெயகௌரி ஆகியோரின் அருமைப் பேரனாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2024) வியாழக்கிழமை பி.ப. 01.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்று தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**174 முதலாம் குறுக்குதெரு**
**யாழ்ப்பாணம்**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 1137) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச ஊழியர்களின் ஊதியம் எட்டப்பட்ட முடிவுகள் விவரம்

**கொழும்பு, ஓக. 15**

**அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அரச துறையின் பிரதான தொழிற்சங்கங்களுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களின் அடிப்படையில், அரச ஊழியர்களின் ஊதிய உயர்வு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.**

இதன்படி பின்வரும் விடயங்களுக்கு அமைச்சரவையால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது:

✦ ஒட்டுமொத்த அரச சேவையிலுள்ள அனைத்துப் பதவிகளையும் நான்கு பிரதான மட்டங்களின் கீழ் வகைப்படுத்தி ஒவ்வொரு வகுதிக்கும் இலங்கைத் தராதர வழிகாட்டல் மற்றும் தேசிய தொழில் நிபுணத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு உரிய தொழிலின் பணிப்பொறுப்புகள் மற்றும் விசேட தொழில்களுக்கான நிபுணத்துவத்துவமுடைய ஊழியர்களை கவர்ந்திழுப்பதற்கும், தொழில்களைத் தக்கவைத்தலைக் கருத்தில் கொண்டும் ஆட்சேர்ப்புத் தகைமைகளை உபவகுதிகளுக்கு வகைப்படுத்தல்.

✦ ஆரம்பநிலை சேவை வகுதிகளுக்கும் ஆட்சேர்ப்புக்கான அடிப்படைத் தகைமைகளாக இலங்கை தராதர வழிகாட்டல், தேசிய தொழில் நிபுணத்துவத்தின் அடிப்படையில் சேவைத் தேவைகளுக்கேற்ப பொருத்தமான முறைமையைப்பின்பற்றுதல்.

✦ ஏனைய அனைத்துச் சேவை வகுதிகளுக்கும் முறைமைப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சை முறை மூலமாக மட்டும் ஆட்சேர்ப்புச் செய்தல். அதற்கமைய, தகைமைக்கு ஏற்புடைய வகையில் தற்போதுள்ள அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு ஒழுங்குவிதிகளை துரிதமாகத் திருத்தம் செய்தல்

✦ 2025 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கருதி வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு சீராக்கல்கள் மற்றும் இதுவரை சேர்க்கப்பட்டுள்ள அனைத்துக் கொடுப்பனவுகளையும் ஒருங்கிணைத்து அனைத்து அரச ஊழியர்களுக்கும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவாக மாதாந்தம் 25 ஆயிரம் ரூபாவை வழங்கல்.

✦ அரச சேவையின் ஆகக் குறைந்த ஆரம்ப மாதாந்தச் சம்பளத்தை ஆகக் 24 வீதத்தால் அதிகரித்து வாழ்க்கைச்செலவுக் கொடுப்பனவுடன் மொத்தச் சம்பளமாக ரூபா 55 ஆயிரம் வரை அதிகரித்து ஏனைய அனைத்துப்பதவிகளுக்குமான அடிப்படைச் சம்பளத்தை அதற்கேற்புடைய வகையில் சீராக்கல்.

✦ அரச வர்த்தகக் கம்பனிகள் வங்கிகள் தவிர்ந்த ஏனைய அனைத்து அரச நிறுவனங்களுக்கும் இந்தப் புதிய சம்பளம் மற்றும் கொடுப்பனவு முறையை நடைமுறைப்படுத்தல்.

✦ 2030ஆம் ஆண்டாகும் போது அரச சேவையில் ஒட்டுமொத்த பணியாளர்களை பத்து லட்சமாகவோ அல்லது அதற்குக் குறைவான மட்டத்திற்கு மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

✦ அதற்கமைய, 2025ஆம் ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் ஒட்டுமொத்த அரச சேவையை இயன்றவளவுக்கு டிஜிற்றல் மயப்படுத்தல் மற்றும் தன்னியக்க முறை மூலமான இலத்திரனியல் கட்டமைப்பு ரீதியான அரச நிர்வாக முறைமையை அறிமுகப்படுத்தல் மற்றும் அதற்கான அரச முதலீடுகளுக்கு முன்னுரிமை வழங்குதல்.

✦ அரச துறையிலுள்ள அனைத்து ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்களும் உள்ளடங்கலாக ஆகக் குறைந்தது ஆயிரம் ரூபா மாதாந்தப் பங்களிப்புடன் மிகவும் கவர்ச்சிகரமான நன்மைகள் கிடைக்கக்கூடிய வகையிலான மருத்துவக் காப்புறுதி முறைமையை 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் நடைமுறைப்படுத்தல்.

✦ இயன்றவரை வெளியகச் சேவைகள் போன்ற முறைமைகள் மூலம் அரச செலவுகளின் சுமையைக் குறைக்கும் வகையில் உயர்வான வினைத்திறனான வகையில் நியம முறைமைகளைப் பின்பற்றி சேவைகளைப் பெறுதல்.

✦ அடையாளம் காணப்பட்ட திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச் சபை நிறுவனங்களை பங்குச் சந்தையில் அட்டவணைப்படுத்தப்பட்ட வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிகளாக மாற்றுவதற்கான மீள்கட்டமைப்பு செயற்றிட்டத்தை அமுல்படுத்துதல்.

✦ தகுந்த வேலை ஆய்வை மேற்கொண்டு, ஒட்டுமொத்த அரச துறை ஆளணியினர் மற்றும் சேவைகள் தொடர்பாக விஞ்ஞான ரீதியான ஆய்வை மேற்கொள்வதற்காக 2025ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுத்தல்.

✦ அதற்கமைய அனைத்து அரச ஊழியர்களுக்கும் செயலாற்றுகை சுட்டிகளை தயாரித்து, அவற்றின் முன்னேற்றத்தின் அடிப்படையில் சம்பள உயர்வை வழங்கல்.

✦ 2020ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வுபெற்றுள்ள அரச ஊழியர்களுக்கு உரித்தான சம்பள உயர்வை வழங்கி, அவர்களுடைய ஓய்வூதிய சம்பளத்தை திருத்தம் செய்து ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்தல்.

✦ ஓய்வூதியதாரர்களுக்கான வாழ்க்கைச்செலவுக் கொடுப்பனவுகள், தற்போது சேவையிலுள்ள அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவில் 50 வீதத்திற்குச் சமமான வகையில் 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் வழங்கல்.

✦ தற்போது காணப்படுகின்ற வரிக் கொள்கையில் இந்தச் செலவுகளை முகாமைத்துவத்தில், இச்சம்பள முறைமையை நடைமுறைப்படுத்தல் மற்றும் முன்மொழியப்பட்டுள்ள சம்பள முறைமையை 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம்அரசநிதிநிலைமைகளையும் கருத்தில் கொண்டு கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்தல்.

இவ்வாறான நடவடிக்கைகளுக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம)

## ஆதன பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம்-20, ஈச்சமோட்டை வீதி, 7/14A எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் J.N. தம்பரும் J.H.J திசவீரசிங்கியும் என ஆதனவரிப் பதிவேட்டில் காணப்படுகின்றது. இவ்வாதனத்தை யாழ்ப்பாணம் சுண்டிக்குளி. இல 5/4, ஈச்சமோட்டை வீதியைச் சேர்ந்த செல்லர் இராசதுரை என்பவர் பிரசித்த நொத்தாரிசு க.சிவலிங்கம் முகதாவில் 1974.12.04ல் 1706 ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் விஸ்தீரணம் நெற்பரப்பு 2 குளி 71/2 அளவு கொண்ட ஆதனத்தை தனது மனைவி இராசதுரை பெண் கனகம்மாவிற்கு வழங்கியுள்ளார்.

குறித்த இராசதுரை கனகம்மா பிரசித்த நொத்தாரிசு வே.நடராசா முகதாவில் 1991.02.10ல் 2749ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் மேற்படி அளவுகொண்ட அதே ஆதனத்தை தனது பேரப்பிள்ளைகளான தேவநாயகம் யூலியற் உதயதரிசினி, தேவநாயகம் உசாந்தினி, தேவநாயகம் யஸ்மின் கலாநிதி. ஜெயராம் வினோ பிரசன்னா ஆகியோருக்கு நன்கொடையளித்துள்ளார்.

ஜெயராம் வினோ பிரசன்னா என்பவர் பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் 10.04.2005ல் 2924ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதி மூலம் விஸ்தீரணம் நெற்பரப்பு 2 குளி 71/2 ல் தனக்குரிய சொரியல் பங்கான 1/4 இனை தனது பேர்த்தியாகிய இராசதுரை கனகம்மாவிற்கு நன்கொடையளித்துள்ளார். இராசதுரை கைம்பெண் கனகம்மா என்பவர் பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் 01.02..2009ல் 4943ம் இலக்கத்தில் நிறைவேறிய'நன்கொடை உறுதி மூலம் விஸ்தீரணம் நெற்பரப்பு 2 குளி 71/2 ல் தனக்குரித்தான சொரியலான 14 பங்கினை தர்மலிங்கம் தயானந்த சீலன் பெண் உஷாந்தினி என்பவருக்கு வழங்கியுள்ளார்.

தர்மலிங்கம் தயாநந்தசீலனும் பெண் உஷாந்தினியும் பிரசித்த நொத்தாரிசு சி.இளங்கீரன் முகதாவில் 24.12.2018ல் 10102ம் இலக்கத்தில் ஆதன விஸ்தீரணம் தொடர்பில், பிரசித்த நொத்தாரிசு வே.நடராசா முகதாவில் 1991.02.10ல் 2749ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மற்றும் பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் 01.02.2009ல் 4943ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதிகள் மூலம் தமக்கு 1/2 பங்கு வந்தடைந்தது என்றும் இதனை சொரியலாய் ஆட்சி செய்வதில் உள்ள சிக்கல்கள் காரணமாக மறுபங்காளரின் சம்மதத்துடன் உத்தரவுபெற்ற நிளஅளவையாளர் அ.சந்தியாப்பிள்ளையினால் 19.06.2009ம் திகதி அளந்து பிரிவிட்டு வரைந்த 1825ம் இலக்க நிலஅளவைப் படத்தின் படி துண்டு 1,3 சேர்ந்து நெற்பரப்பு 1 குளி 6.58 என உறுதிப்படுத்தல் உறுதியினை நிறைவேற்றியுள்ளனர்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று, யாழ்ப்பாணம் மாநகரசபை, யாழ்ப்பாணம் பிரதேச செயலகம், கிராமசேவையாளர் பிரிவு J/66. சுண்டிக்குளி இறை "முதலைக்குளம் வயல்" நெற்பரப்பு 2 குளி 71/2 இதில் சொரியலாய் 1/4 பங்கு (இதன் பதிவு டி 566/80), "முதலைக்குளம் வயல்" நெற்பரப்பு 2 குளி 71/2 இதில் சொரியலாய் 1/4 பங்கு (இதன் பதிவு டி 566/80), இவ்விரு பங்குகளும் சேர்ந்து "முதலைக்குளம் வயல்" நெற்பரப்பு 2 குளி 71/2 இதில் சொரியலாய் 1/2 பங்கு. இது மறு பங்காளரின் சம்மதத்துடன் பிரிவிட்டு நிந்தமாக ஆட்சி செய்ததன்படி உத்தரவு பெற்ற நில அளவையாளர் அ.சத்தியாப்பிள்ளை 19.06.2009ம் திகதியில் அளந்து பிரிவிட்டு வரைந்த 1825 ம் இலக்கப்படத்தின் படி துண்டுகள் 1,3 என்பன சேர்ந்து நெற்பரப்பு 1 குளி.6.58ம் கல்வீடும் கிணறும் மலசல கூடமும் மற்று மதற்குச் சேர்ந்தவைகளும். இதன் எல்லைகள் -

கிழக்கு - பாவிலு அமிர்தநாயகத்தின் உரிமைக்காரரின் ஆதனம்
வடக்கு - பொன்னம்பலம் விஜயரத்தினத்தின் ஆதனம்
மேற்கு - திரவியம் பாலசிங்கத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனமும் குறித்த படத்தில் துண்டு 2 என சுட்டிய பாகமும்
தெற்கு - குறித்த படத்தில் துண்டு 2 என சுட்டப்பட்ட பாகமும் ஒழுங்கை முகப்பும் இதனடங்கலும்

தற்போது இவ்வாதனத்தை தர்மலிங்கம் தயானந்தசீலனும் பெண் உஷாந்தினியும் தமது பெயருக்கு எமது ஆதனவரிப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு திகதியிலிருந்து முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது தர்மலிங்கம் தயானந்த சீலனும் பெண் உஷாந்தினியும் என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாநகர ஆணையாளர்**
**மாநகர சபை**
**யாழ்ப்பாணம்.**

(CR/42930) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** பொறுமை அவசியம். பணவரவுக்கு வாய்ப்பு உண்டாகும். புதிய முயற்சிகளில் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து ஈடுபடவும். உடல் நலனில் கவனம் தேவை. உறவினர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் மிகுந்த கவனத்துடன் ஈடுபடவும். வாக்குவாதத்தில் ஈடுபடவேண்டாம். பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படும். சில பிரச்சினைகள் ஏற்படும்.

**மிதுனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். செலவுகள் அதிகரிக்கும். மகிழ்ச்சி உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிர்பார்க்கும் காரியம் அனுகூலமாக முடியும்.

**கடகம்:** முயற்சிகளில் வெற்றி உண்டாகும். சிலருக்கு பிள்ளைகளால் சங்கடங்கள் ஏற்படும். காரியங்கள் சாதகமாக முடியும். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும்.

**சிம்மம்:** உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். தேவையற்ற செலவுகளும் ஏற்படும். கையிருப்பு கரைவதுடன் கடன் வாங்கவும் நேரிடும். செலவுகளால் சஞ்சலம் ஏற்படக்கூடும்.

**கன்னி:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். நல்ல செய்தி இன்று கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. உறவினர்களால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**துலாம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். குடும்பம் தொடர்பான முடிவு எடுப்பதற்கு ஏற்ற நாள். மகிழ்ச்சியுடன் ஆதாயமும் உண்டாகும். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். உறவினர்கள் வகையில் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வியாபாரத்தில் விற்பனை வழக்கம்போலவே இருக்கும்.

**தனுசு:** மனதில் சிறு குழப்பம் ஏற்பட்டு நீங்கும். குடும்ப விஷயமாக சற்று அலைச்சலும் சோர்வும் ஏற்படும். சுபச்செய்தி வரும். உறவினர்களால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படலாம். பாதிப்பு எதுவுமிருக்காது.

**மகரம்:** எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச் செலவுகளும் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வெளியூர்ப் பயணம் தவிர்ப்பது நல்லது. சுபச்செலவுகள் ஏற்படும்.

**கும்பம்:** எதிர்பார்த்த காரியம் சற்று இழுபறிக்குப் பின்னர் முடிந்துவிடும். உடல்நலனில் கவனம் தேவை. விற்பனை விறுவிறுப்பாக நடைபெறும். ஆதாயம் உண்டாகும். நன்மைகள் அதிகரிக்கும். பிரச்சினை ஏற்படும்.

**மீனம்:** அனுகூலமான நாள். எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைக்கும். புதிய முயற்சிக்கு வாழ்க்கைத் துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். முருகப்பெருமானை வழிபட நற்பலன்கள் அதிகரிக்கும்.

# இலவச கல்விக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் 17,18 இல்

யாழ்ப்பாணம், ஓக. 15

மாபெரும் இலவச கல்விக் கண்காட்சி ஒன்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் எதிர்வரும் 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் காலை 9 மணியில் இருந்து மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளதாக கண்காட்சியின் ஒருங்கிணைப்பாளர் அ. அஞ்சலிகா தெரிவித்துள்ளார்.

கண்காட்சி தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தக் கல்விக் காண்காட்சியில், இலங்கையில் உள்ள அனைத்து கல்விசார் நிறுவனங்களும் பங்குபற்றவுள்ளன.

க.பொ.த. சாதாரண தரம் மற்றும் க.பொ.த. உயர்தரக் கல்வியை நிறைவுசெய்த மாணவர்கள் அடுத்த கட்டமாக என்ன செய்யவேண்டும்? என்ற தெளிவுபடுத்தலை ஏற்படுத்தும் முகமாக இந்த கல்விக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-27)

## சுகாதாரப் பிரிவினரால் நல்லூரில் கண்காணிப்பு

யாழ்ப்பாணம், ஓக.15

நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு சுகாதாரப் பிரிவினரின் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

ஆலயச் சுற்றாடலிலுள்ள உணவகங்கள், வர்த்தக நிலையங்கள் என்பன சுகாதாரப் பிரிவினரால் திடீர் சோதனைக்குட்படுத்தப்படுகின்றன.

உணவகங்களில் உணவு கையாள்தல், சுகாதார நடைமுறைகள் பின்பற்றல் தொடர்பில் தினமும் கண்காணிக்கப்படுவதுடன் ஆலய மடங்களும் சுகாதாரப் பிரிவினரால் திடீர்ச் சோதனைக்குட்படுத்தப்படுகின்றன. (ச-17)

நல்லூரில்

## உற்பத்தியாளர்கள் விற்பனைச் சந்தை

யாழ்ப்பாணம், ஓக.15

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு உள்ளூர் உற்பத்தியாளர்களின் விற்பனைச் சந்தை சங்கிலியன் பூங்காவில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

சிறுமுயற்சியாளர்களின் இந்த விற்பனைச் சந்தை உற்சவகாலம் முடியும் வரை தொடர்ச்சியாக நடைபெறவுள்ளது.

சிறுதொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக இந்த விற்பனைச் சந்தை இடம்பெற்று வருகின்றது. (ச-17)

## வாழைப்பழம் விலையுயர்வு

யாழ்ப்பாணம், ஓக.15

யாழ்.குடாநாட்டில் வாழைப்பழங்களின் விலை திடீரென அதிகரித்துள்ளதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

கடந்த மே மாதத்துடன் ஆரம்பமான காற்றுக் காரணமாக வாழை மரங்களில் குருத்தடைப்பு நோய் பரவலாக ஏற்பட்டு வருகின்றது.

இதனால் வாழைப்பழங்கள் சந்தைக்கு குறைவாக வருவதனால் அவற்றின் விலை எகிறியுள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன் யாழ்.குடாநாட்டில் பிரதான ஆலயங்களின் மஹோற்சவங்கள் ஆரம்பமாகி நடைபெற்று வருவதனால் வாழைப்பழங்களின் நுகர்வு அதிகரித்துக் காணப்படுகிறது.

தற்போது சந்தைகளில் கதலி கிலோ 150 ரூபாவாகவும் இதரை கிலோ 160 ரூபாவாகவும் வாழைக்காய் கிலோ 250 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. (ச-17)



## அடிக்கல் நடுகை

யாழ்ப்பாணம், ஓக.15

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் காங்கேசன்துறையிலுள்ள தொகைச்சாலைக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுக் காலை சமயக் கிரியைகளுடன் இடம்பெற்றது.

நிகழ்வில் கூட்டுத்தாபன அதிகாரிகள் மற்றும் காங்கேசன்துறை எரிபொருள் விநியோக களஞ்சியசாலைப் பணியாளர்கள் கலந்து கொண்டனர். (ச-17)

## வரலக்சுமி பூஜை

யாழ்ப்பாணம், ஓக.15

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு வரலக்சுமி பூஜையும் நூல் வழங்கலும் இடம்பெறும். அன்றைய தினம் காலை திருவாசக முற்றோதலும் இடம்பெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ச-25)

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத் திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லை உதவிப் பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் தலைமையில் திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் திருக்கூட்ட நிகழ்வு நேற்றுப்புதன்கிழமை இடம்பெற்றது. இதன்போது மருதங்கேணிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (ச-25)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘கிருஷ்ணார்ப்பணம்’ நடன ஆற்றுகை இன்று

யாழ்ப்பாணம், ஒக.15

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய சப்பரத் திருவிழாவை முன்னிட்டு பொன்னாலை சந்திர பரத கலாலயம் வழங்கும் ‘கிருஷ்ணார்ப்பணம்’ நடன ஆற்றுகை நிகழ்வு ஆலய முன்றலில் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறும்.

கலாலய சிரேஷ்ட மாணவிகளின் நடன நெறியாள்கையில் 117 மாணவர்கள் ஆற்றுகை செய்யும் இந் நிகழ்வில் ம.வரகனி, சா.வீரலட்சுமி, லோ.தர்சினி, செல்விகள் சு.மோகனப்பிரியா, இ.கீர்த்தனா, உ.அபிராமி, ஜெ.ஜெயலக்சி, கி.சுவேனியா ஜெ.சிந்துகா ஆகியோர் நட்டுவாக்கம் செய்வர். ச.யதுர்ஷன், த.விந்துகா, பா.யாழினி, பா.பானுஷா, கோ.சதுஷா ஆகியோர் பாடல் பாட ப.விக்னேஸ்வரன், க.கார்த்திகன் மிருதங்கத்தையும் ராகவேந்திரா கீபோட்டையும் இசைக்கவுள்ளனர். (ச-25)

# பஜனை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக.15

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வுகள் எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமையிலிருந்து ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

7 ஆம் நாள் நிகழ்வாக இன்று 15 ஆம் திகதி வியாழக்கிழமை கந்தரோடை ஆலடி வீரகத்தி விநாயகர் பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ச-45)

## 2025ஆம்....

கடுமையான நிதி ஒழுக்கத்துடன் தயாரிக்கப்படவுள்ளது.

இது தொடர்பான வழிகாட்டுதல்களுடன் கூடிய சுற்றறிக்கையை நிதி அமைச்சு தற்போது வெளியிட்டுள்ளது.

நிதி அமைச்சின் செயலாளர் கே.எம். மஹிந்த சிறிவர்த்தன கையொப்பமிட்ட இந்தச் சுற்றறிக்கை அமைச்சுகள், திணைக்களங்கள், மாகாணசபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், சட்டரீதியான நிறுவனங்கள் உட்பட அனைத்து அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அரச நிதியை திறமையாகவும், ஊழலின்றியும் நிர்வகிப்பதற்கான ஆலோசனைகள் அடங்கிய நிதி ஒழுக்கங்கள் அந்தச் சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நிதி ஒழுக்கம் மற்றும் விவேகமான நிதி முகாமைத்துவத்தை உறுதி செய்யும் வகையில் தயாரிக்கப்படுவதோடு, இதன் மூலம் செயற்றிறனை மேம்படுத்துவதற்கும் பணத்தின் மதிப்பை உறுதி செய்வதற்குமாக அரச நிதிகள் மூலோபாய ரீதியாக பயன்படுத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ச-இ)

## ஆய்வுக்...

வொரு ஆய்வுக் கப்பலையும் அனுமதிப்பதில்லை என்று இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதேவேளை - 2025ஆம் ஆண்டு ஜனவரி முதல் கப்பல்களை அனுமதிப்பது தொடர்பில் பரிசீலிக்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அறிவித்துள்ளார். (அ-ம-6)

## 2ஆம்...

நாளை வழங்கப்படும் இரண்டாம் தவணை விடுமுறைகள் எதிர்வரும் 25ஆம் திகதியுடன் முடிவடையும் என்றும், எதிர்வரும் 26ஆம் திகதி மூன்றாம் தவணை கற்றல் செயற்பாடுகள் ஆரம்பமாகும் எனவும் கல்வி அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## ஆதரவளிப்பதற்கு...

மேற்படி கட்சிகள் ஜனாதிபதி ரணிலைச் சந்தித்தமைக்குப் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ள பின்னணியிலேயே, அந்தக் கட்சிகளின் பிரதிநிதிகள் இவ்வாறு கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் நீதியரசர் விக்னேஸ்வரன் ஆதரவு தெரிவித்துள்ளார். அதன் அடிப்படையில் பொது ஒப்பந்தத்தில் கையெழுத்து இடுவதற்கு நீங்களும் இணங்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் எம்மிடம் கோரிக்கை விடுத்தார். ஆனால், நாங்கள் அவருடைய கோரிக்கையைத் திட்டவட்டமாக நிராகரித்தோம். நீதியரசர் விக்னேஸ்வரனின் கட்சி ஒரு தனிக்கட்சி. அவர் யாரை ஆதரிப்பது என்பது அவருடைய தனிப்பட்ட விருப்பம். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு நிலைப்பாட்டைத் தெரிவிப்பது அவருடைய சுதந்திரம். நாம் அப்படியான முடிவுகள் எதையும் இதுவரைக்கும் எடுக்கவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நாம் சந்தித்தது எமது மக்களின் நிலைப்பாட்டைத் தெளிவாகத் தெரிவிப்பதற்கும், எமது மக்களின் அரசியல் அபிலாஷைகளைத் தீர்ப்பதற்கு அவருடைய அர்ப்பணிப்பு எந்தளவுக்கு இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்வதற்குமே. மாறாக அவருக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக அல்ல - என்றனர். (அ-ம-27)

## செஞ்சோலைப்...

செஞ்சோலைவளாகத்தின் நினைவு வளைவு அமைந்துள்ள பகுதியில் தாய்த்தமிழ் பேரவையால் நேற்றுக் காலை 9 மணியளவில் அஞ்சலி நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. பொதுச் சுடரை செஞ்சோலை வளாகத்தில் படுகொலை செய்யப்பட்ட 2 பிள்ளைகளின் தந்தை ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர் திருவுருவப் படத்துக்கு சுடர் ஏற்றி, மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினர்.

அதேபோல், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் நேற்று அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. பெருமளவான மாணவர்கள் உணர்வுபூர்வமாக இதில் கலந்துகொண்டனர். (அ-ம-27-13)

## காணாமற்...

பேரிடமும், பூநகரி பிரதேச செயலர் பிரிவைச்சேர்ந்த 50 பேரிடமும், கண்டாவளை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 48 பேரிடமும் இவ்வாறு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

காணாமற்போனோருக்கான அலுவலகத்தின் தவிசாளர் மகேஸ் கட்டுலந்த தலைமையிலான குழுவினரால் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. (அ-ம-113)

## சுதேச...

ஆணையாளராகக் கடமையாற்றி வந்த வைத்திய கலாநிதி தி.சர்வானந்தன் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கான நியமனக் கடிதத்தை வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் வழங்கியுள்ளார். (அ-ம-20-125)

## ஜனாதிபதித்...

செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் இம்முறை பலமுனைப் போட்டி இருக்கும் என்று ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட நிலையில் 2019ஆம் ஆண்டை விட இந்தமுறை அதிகளவானோர் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளனர். இதன்படி அரசியல் கட்சிகள், சுயேச்சை வேட்பாளர்கள் என 40 பேர் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கட்டுப்பணம் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து இன்று வேட்புமனுத் தாக்கல் இடம்பெறவுள்ளது.

40 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ள போதிலும், நான்கு முனைப்போட்டியே தேர்தலில் பிரதானமாக இருக்கும் என்று கருதப்படுகின்றது. இதன்படி, ஜனாதிபதி ரணில், பிரதான எதிர்க்கட்சித் தலைவரான சஜித், அநுரகுமார திஸநாயக்க மற்றும் நாமல் ராஜபக்ச ஆகியோருக்கு இடையிலேயே கடும் போட்டி ஏற்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகின்றது.

2019ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 35 வேட்பாளர்கள் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## தேர்தலுக்காக...

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்கவை ஜனாதிபதி வேட்பாளராகப் பெயரிடுவதற்காக அவரிடமிருந்து 30 மில்லியன் ரூபாவை இலஞ்சமாகக் கோரியமைக்காகவே மேற்படி நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஊழல் மோசடி மற்றும் விரயத்துக்கு எதிரான மக்கள் இயக்கத்தின் தலைவர் கமந்த துஷாரவின் முறைப்பாட்டுக்கமைய இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

வீடு வாடகைக்கு

திருநெல்வேலி சந்தி, பலாலி வீதிக்கு அருகாமையில் 4 அறை வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு - மாலை 6.00 க்கு பின்
077 592 7373, 077 448 1630
(CS/55929) J-1



கொக்குவில் - நந்தாவில்
கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்
வரலக்ஷ்மி விரதம்
• காலம் : 16.08.2024 வெள்ளிக்கிழமை
• பூசை நேரம் : மாலை 3.00 மணி
காப்பு எடுக்க விரும்பும் அடியார்கள் ஆலயகாரியாலயத்தில் முற்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும்.
ஆலய பரிபாலன சபை
(CS/55928) J-1

தவறவிடப்பட்டுள்ளது

நல்லூர் குறுக்கு வீதியில் இருந்து யாழ்ப்பாணம் பண்ணை கடற்கரை வீதிக்கு இடையேயான பிரதேசத்தில் தொலைபேசி (I Phone XR) சபாரத்தினம் பிரபாகரன், பிரபாகரன் சந்திரமாலா என்பவர்களுடைய சுவிஸ் நாட்டின் அடையாள அட்டை (C), சுவிஸ் நாட்டின் வாகன அனுமதிப்பத்திரம் மற்றும் வங்கிக்கடனட்டை என்பன நேற்று 13.08.2024 மாலை 6.30 - 7.30 இடைப்பட்ட நேரத்தில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
**No. 69, நல்லூர் குறுக்கு வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**077 608 6140, 075 984 6224**
(CS/55926) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.08. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.